1975 மார்ச் 5]

கின்றன, இவற்றை ஏற்படுத்துவதன் மூலமாகப் பொதுமக்களுக்கு வீண் பண விரையமும் ஆகாமல் இருக்கும். ஆகவே, இதை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆலோசித்த பின் முடிவு எடுக்கலாம்.

திரு. கே. என். குமாரசாமி : இந்த மாதிரி நீதிமன்றங்கள் இப்போது இல்லாத காரணத்தினால் முன்சீப் கோர்ட்களிலே சிவில் வழக்குகள் 6, 7 ஆண்டுகள் என்று நீட்டித்துக் கொண்டுபோய் மக்கள் அவஸ்தை படுகிறார்கள். முன்னாலே எல்லாம் பெரும்பாலும் வழக்குகள் கிராமக் கோர்ட்டுகள் மூலம் பைசல் செய்யப்பட்டிருக்கின்றன. அதே மாதிரி இப்போது பைசல் செய்யக் கூடிய முறையில் அரசு இதைக் கொண்டு வர ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1958 ஆம் ஆண்டிலேயே இப்படிப்பட்ட நீதி மன்றங்கள் எடுக்கப்பட்டுவிட்டன. அதை மீண்டும் வைக்க வேண்டுமா என்பதைப் பற்றி இருவேறு கருத்துக்கள் இருக்கின்றன. தம்முடைய அரசைப் பொறுத்தவரையில் இதற்காக ஒரு புதிய சட்டத்தைத் தயாரித்து இருக்கிறோம். எப்படிச் செயல்படுத்துவது என்பது பற்றி உயர்நீதி மன்றத் திடம் ஆலோசனை கேட்டோம். அவர்கள் சில குறிப்புகள் கொடுத்திருக்கி றார்கள். அதைப் பரிசிலித்துத்தான் முடிவு எடுக்க வேண்டும்.

சூரியகாந்தி எண்ணெய்

*** 187 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சூரியகாந்தி விதைகளைப் பதப்படுத்துவதற்கான திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சூரியகாந்தி விதைகளைப் பதப்படுத்தும் இரண்டு ஆலைகளை (எண்ணெய் பிழியும் ஆலைகள்) ஒன்று கோயம்புத்தூர் கூட்டுறவு மாவட்ட விற்பனை வழங்கு சங்கத்தால், ஒண்டிப்புத்தூரிலும், மற்றொன்று தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை சம்மேளனத்தால் விருத்தாசலத்திலும் நிறுவ அரசு ஒப்புதல் அளித்துள்ளது. விரைவில் வேலை முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

[1975 மார்ச் 5

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவர் அவர்களே, சூரியகாந்தி இப்போது தமிழகத்திலே பல இடங்களில் பயிரிடப்படுகிறது. ஆகவே இந்த ஆலையைத் தென்மாவட்டங்களிலே எங்காவது நிறுவுவதற்கு உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது தொடங்கி இருப்பது நடந்தவுடன் அதை நடைமுறையிலே பார்த்ததற்குப் பின்னாலே ஆலோசிக்கலாம்.

திரு. கி. ஜெயராமன் : தலைவர் அவர்களே, இந்த சூரியகாந்தி எண்ணெய் மஞ்சள் நிறமாகவும் கொழுப்பு சக்தியைக் குறைப்பதாகவும் இருக்கின்ற காரணத்தினால் மக்கள் அதிகமாக விரும்புகிறார்கள், மேலும் மக்கள் இதை விரும்பக்கூடிய அளவிற்கு எப்படி டீ, சோப்பு போன்றவற்றை எல்லாம் இலவசமாகக் கொடுத்து விருப்பத்தை உண்டாக்குகிறோமோ அதைப்போன்று இந்த எண்ணெயையும் இலவசமாகக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வியாபார நோக்கத்தோடுதான் இதை ஆரம்பித்திருக்கிறோம். ஆகவே, இலவசமாகக் கொடுக்க முடியாது.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : சூரியகாந்தியைப் பயிர் செய்வதற்குத் தனி நிலம் தேவையில்லை. எங்கு போட்டாலும் பயிராகிறது. ஆகவே அரசாங்கம் உற்பத்தியைப் பெருக்க தனித் திட்டம் வைத்திருக்கிறதா ? இந்த எண்ணெயை எந்த எந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பயிரிடுவது பற்றி வேளாண்மைத் துறையிடம் கேட்க வேண்டும். உற்பத்தி செய்தவற்றிலிருந்து எண்ணெய் எடுத்து விற்பனை செய்வது பற்றித்தான் முயற்சி செய்து வருகிறோம்.

திரு. கே. டி.கே . தங்கமணி : சூரியகாந்தி எண்ணெயை அதிகமாக மற்ற நாடுகளிலேயும் பயன்படுத்துகிறார்கள். இது தமிழ்நாட்டிலே எந்த அளவிற்கு உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் நான் சொன்னேன் உற்பத்தியைப் பற்றி விளக்கம் என்னிடம் இல்லையென்று. கடலை எண்ணெயைப் பயன்படுத்துகின்ற பழக்கமுடைய நம்முடைய மக்கள் இந்த சூரியகாந்தி எண்ணெயைப் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறது. உற்பத்தியைப் பெருக்க வேளாண்மைத் துறை முயற்சியிலே ஈடுபட்டது. அதிலிருந்து எண்ணெய் எடுக்கக்கூடிய முறையிலே ஆலைகளை உருவாக்குகின்ற முயற்சிகளைத்தான் இப்போது நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

1975 மார்ச் 5]

திருமதி ஜோதி வெங்கிடாசலம் : சூரியகாந்தி எண்ணெயையும் மற்ற எண்ணெய் ரேஷன் கடைகளிலே கொடுக்கப்படுவதைப்போல—ரேஷன் கடைகளிலே கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் கூட்டுறவுத் துறையிலே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகள் இவைகள் மூலம் அதை விற்க முயற்சி எடுக்கலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்த சூரியகாந்தியிலிருந்து தயாரிக்கப்படுகின்ற எண்ணெய் மனிதனுடைய கொழுப்பை அடக்கக்கூடியதாகச் சொல்லப்படுகிறதே ? ஆகவே கொழுப்பை அடக்குகின்ற எண்ணெய் நம்முடைய நாட்டிற்கு அதிகமாகத் தேவைப்படுவதால் அதிகமாக இதை உற்பத்தி செய்யக்கூடிய முறையில் இதற்கு சப்ஸிடி கொடுக்க அரசு முன்வருமா ?

(பதில் இல்லை)

கோவை மாவட்டத்தில் புதிய நீர் மின் திட்டம்

* 188 வினா—திரு. என். கிட்டப்பா:
திரு. என். கே. பழனிசாமி :

மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு கட்ட இருக்கும் நீர் மின்சார நிலையத் திட்டத்துக்கு கேரள மாநில அரசு ஆட்சேபம் தெரிவித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம். கோயம்புத்துாரில் நெல்லித்துறை நீர் மின்சக்தித் திட்டம் காவிரி ஆற்றுப் பள்ளத் தாக்கில் அமைக்கப்படுகிறது என்றும் இது இரு மாநிலப் பாங்குடையது என்றும் கூறி கேரளா அரசு இத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

(இ) இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் இருமாநிலப் பாங்கு எதுவும் ஏற்படாதென்று இவ்வரசு மத்திய நீர்மின்சக்தி ஆணைக்குழுவிற்குத் தெரிவித்துள்ளது. இறுதியாக, கேரளா அரசின் மறுப்புரைகளை உரியவாறு பரிசீலித்த பின்னர், 1974 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இத் திட்டத்திற்கு மத்திய நீர் மின் சக்தி ஆணைக்குழு அனுமதி வழங்கி, திட்ட ஆணைக்குழுவும் இதற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தற்பொழுது இந்தத் திட்டம், தமிழ்நாடு மின்சார வாரியத்தால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.